


**28. 07. 2026**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நீட் விவகார போராட்டத்தில் மாணாக்கர் மீது, காவல்துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் பிரச்சனையில் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளன.
2. நீட் தொடர்பான மாணாக்கர் போராட்டத்தின் போது, மாணவர்கள் மற்றும் காவல்துறையினர் மீதான தாக்குதல் சம்பவங்கள் குறித்து நேர்மையான புலனாய்வின் அவசியத்தை உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.
3. காவிரியின் குறுக்கே கர்நாடகம் அணை கட்ட தமிழகத்தின் அனுமதி தேவையில்லை என்ற மத்திய ஜல்சக்தி இணையமைச்சர் திரு. ராஜ்பூஷனின் கருத்துக்கு, முதலமைச்சர் திரு. விஜய் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.
4. மேகதாது அணை கட்ட தமிழகத்தின் அனுமதி தேவையில்லை என்ற கருத்து, காவிரி விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை கேள்விகுறியாக்கி உள்ளதாக எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.
5. தமிழக சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின், பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டம் முதலமைச்சர் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

நீட் விவகார போராட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கர் மீது, காவல் துறையினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் பிரச்சனையில் எதிர் கட்சிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் 2 மணிவரை இன்றும் ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவையில் கேள்வி நேரத்தை அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா எடுத்துக்கொள்ள முயன்றபோது இந்த பிரச்சனையை எதிர்கட்சியினர் எழுப்பினர்.

பொதுத்தேர்வு முறைக்கேடுகள் சட்டத்திருத்த மசோதா குறித்து விவாதித்து ஒருமித்த கருத்து எட்ட எதிர்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டுமென்று அவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா விடுத்த கோரிக்கைக்கு யாரும் செவி மடுக்காமல் அமளியில் ஈடுபட்டதை அடுத்து மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவை இன்று கூடியபோது நுகர்வோர் விவகாரம், உணவு, பொது விநியோகம், துறை சார்ந்த அறிக்கையை மத்திய அமைச்சர்கள் அவையில் சமர்ப்பித்தனர்.

அதனைத் தொடர்ந்து அவைத்தலைவர் திரு. சி. பி. ராதா கிருஷ்ணன் பூஜ்ஜிய நேரத்தை நடத்த முயன்றபோது நீட் போராட்டத்தில் மாணவர் தாக்குதல் பிரச்சனையை எதிர்கட்சிகள் எழுப்பியதால் நிலவிய அமளி காரமணாக மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖

உச்சநீதிமன்றம்

நீட் தொடர்பான மாணாக்கர் போராட்டத்தின் போது, மாணவர்கள் மற்றும் காவல்துறையினர் மீதான தாக்குதல் சம்பவங்கள் குறித்து நேர்மையான புலனாய்வின் அவசியத்தை உச்சநீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு, நீட் போராட்டங்களின் போது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான மின்னணு மற்றும் டிஜிட்டல் ஆவணங்களை

பாதுகாப்பாக வைத்திருக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகளை அறிவுறுத்தி உள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணாக்கருக்கு எதிராக நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் என அறிவுறுத்திய நீதிமன்றம், குற்றவியலில் தொடர்புடையவர்களுக்கு இது பொருந்தாது என்றும் கூறியது.

இந்த தாக்குதலில் காயமடைந்த 200 காவல் துறையினரின் குடும்பங்களின் கருத்துக்களையும் ஆராய வேண்டியதன் அவசியத்தையும் நீதிமன்றம் வலியுறுத்தி உள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>மனோஜ் திவாரி</u>

தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற குழு கூட்டத்தில், தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துரைக்கப் பட்டதாக பி.ஜே.பி. உறுப்பினர் திரு. மனோஜ் திவாரி தெரிவித்தார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பொதுத்தேர்வுகள் சட்டத்திருத்த மசோதா தொடர்பாக ஆக்கப்பூர்வான விவாதங்களில் அனைத்து அரசியல் கட்சியினரும் பங்கேற்பார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சியின் திரு. சசிதரூர் பேசுகையில் இந்த சட்டத்திருத்த மசோதா குறித்த விவாதத்தை எதிர்கட்சிகள் ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக கூறினார்.

முன்னதாக நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்ற வாராந்திர கூட்டத்தில் கூட்டணியின் நிலைப்பாடுகள் குறித்து ஆலோசிக்கப் பட்டதாக தெரிகிறது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி, அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

கஜேந்திர சிங் ஷெகாவத்

மாநில அரசுகள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து சுற்றுலா மேம்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் சுற்றுலா சந்தைகளை மத்திய அரசு உருவாக்கி வருவதாக சுற்றுலா அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதிலில் சாலைப்பேரணி, உணவுத் திருவிழா, வர்த்தகக் கூட்டங்கள், சுற்றுலா பயணங்கள், மக்கள் தொடர்புத் திட்டங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும் என்றார்.

சமூக ஊடக ஆர்வலர்களுடன் இணைந்து நாட்டின் முக்கிய சுற்றுலா தலங்கள் குறித்த செய்திகளை மின்னணு வாயிலாகவும், சமூக ஊடகங்கள் மூலமாகவும் எடுத்துரைக்கவும் அமைச்சகம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

பந்தி சஞ்சய் குமார்

நாட்டிலுள்ள 18 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சைபர் குற்றங்களுக்கு எதிரான வழக்குகளை பதிவு செய்ய மின்னணு பூஜ்ஜியம் முதல் தகவல் அறிக்கை முறை அறிமுகம் செய்யப்பட்டு உள்ளதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. பந்தி சஞ்சய் குமார் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இதனைத் தெரிவித்துள்ள அவர், குறிப்பிட்ட நிதியிழப்பு வழக்குகள் சைபர் குற்ற தடுப்பு இணையதளம் மூலமாகவும், 1930 என்ற இலவச தொலைப்பேசி எண் வாயிலாகவும் பதிவு செய்யப்படுவதாகவும், இதன்மூலம் இந்த வழக்கு மின்னணு பூஜ்ஜிய முதல் தகவல் அறிக்கையில் தானாகவே பதிவாகிவிடும் என்றும் குறிப்பிட்டார்.

பின்னர் இப்புகார்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களை 3 நாட்களுக்குள் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்றார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் கடிதம்

காவிரியில் கர்நாடகா மேதாது அணை கட்ட தமிழகத்தின் அனுமதி தேவையில்லை என்று கூறியுள்ள மத்திய ஜல்சக்தி இணையமைச்சர் திரு. ராஜ்பூஷனின் கருத்துக்கு, முதலமைச்சர் திரு. விஜய் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில், கடைமடை மாநில அனுமதி இல்லாமல், மேலே உள்ள மாநிலங்கள் அணை கட்ட முடியாது என்பதை எடுத்துரைத்தார்.

காவிர தொடர்பாக கர்நாடகா, ஆந்திரா இடையிலான வழக்கில் உச்சநீதிமன்ற தீர்ப்பு தெளிவாக உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

காவிரியின் நீர்வளத்தை பாதிக்கும் எந்த கட்டுமானத்தையும், எந்த மாநிலமும் மேற்கொள்ள இயலாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

மேகதாது அணை கட்ட தமிழ்நாட்டின் அனுமதி கர்நாடகாவிற்கு தேவையில்லை என்ற மத்திய இணை அமைச்சரின் கருத்து தமிழகத்தின் உரிமையை கேள்விக்குறியாக்கி உள்ளதாக எதிர்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

கர்நாடகா, காவிரியின் குறுக்கே மேகதாதுவில், அணை கட்டும் முயற்சியை முறியடிக்க முதலமைச்சர் உடனடி எடுக்க வேண்டும் என்றும், இனியும் காலம் தாழ்த்தினால் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலும் பாதிக்கப்படும் என்றும் தமது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இப்பிரச்சனையில் தமிழக அரசியல் கட்சிகள் ஓரணியில் சென்று மத்திய அரசிடம் மேகதாதுவிற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்று தாம் சட்டப்பேரவையில் எடுத்துரைத்ததை திரு. உதயநிதி சுட்டிக்காட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழக சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டம் முதலமைச்சர்
திரு. விஜய் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.
சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாநில தொழில்துறை அமைச்சர் திரு. மதன்ராஜா, இத்துறையின் உயரதிகாரிகள் பங்கேற்றனர்.
தொழில் நிறுவனங்களின் எதிர்கால வளர்ச்சிக்கான நீண்டகால செயல்திட்டத்தை உருவாக்குவது, தொழில் முனைவோர்களை ஏற்படுத்துவது, ஸ்டாட்அப் நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் வழங்குவது தொடர்பான அலோசனைகள் இதில் இடம்பெற்றன.
பட்டமளிப்பு
நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் 33-வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வேந்தரும், தமிழக ஆளுநருமான திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் தலைமையில் இன்று நடைபெற்றது.
871 பேருக்கு பட்டங்களையும்,
113 பேருக்கு தங்கப்பதக்கத்தையும் ஆளுநர் வழங்கினார்.
இந்த ஆண்டு மொத்தம் 37 ஆயிரத்து 877 மாணவ மாணவிகள் பட்டம் பெற்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலக கூட்டரங்கில் மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. ராஜ்மோகன் தலைமையில் ஆசிரியர் சங்கங்கள் மற்றும் ஆசிரியர் அல்லா பணியாளர் சங்கங்கள் பங்கேற்ற கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.
காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ஒருங்கிணைந்த சேவை மைய கட்டடத்தை வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை

அமைச்சர் திரு. SPK தென்னரசு இன்று திறந்து வைத்து பார்வையிட்டார்.
ஆட்சித்தலைவர் திருமதி. சினேகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>கனிம வளம்</u>

வெளி மாநிலங்களுக்கு கனரக லாரிகளில் கனிம வளங்களை ஏற்றி செல்ல தமிழக அரசு 3 மாதங்களுக்கு தடை விதித்த நிலையில் தென்காசி மாவட்டம் புளியரை சோதனை சாவடி வழியாக கேரள மாநிலத்திற்கு கனிமவள லாரிகள் செல்வது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.
தமிழக அரசு நேற்று பிறப்பித்த இந்த உத்தரவை அடுத்து கனிம வளங்களை ஏற்றி வந்த வாகனங்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்,
.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>Hepatitis</u>

உலக Hepatitis தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது.
கல்லீரல் அழற்சி நோயாளிகளுக்கு நோயின் தீவிரத்தை கட்டுப்படுத்தி அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாக திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை கல்லீரல் உதவி பேராசிரியர் டாக்டர் கிஷ்வந்த் தெரிவிக்கிறார்.
.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖

<u>பேட்மிட்டன்</u>

தைவானில் நடைபெறும் தாய்பேய் ஓப்பன் பேட்மிட்டன் கலப்பு இரட்டையர் முதல்சுற்றில் இந்தியாவின் **Ishaan Bhatnagar**, **Shruti Mishra**, **Dhruv Rawat, Maneesha**, **Sathwik Reddy, Radhika Sharma** ஆகியோர் இன்று களமிறங்குகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖